# ஒற்றுப் பிழைகள் - 2

## வல்லெழுத்து மிகா இடங்கள்:

கீழ்வரும் உதாரணங்களின் படி இரு சொற்கள் சேரும்போது, இரண்டாவது சொல்லின் முதலில் வரும் எழுத்து "க், ச், த், ப்," முதலிய நான்கு மெய்யெழுத்துகளில் உருவான உயிர் மெய்யெழுத்துக்களாக இருப்பின் (உம் - க, கா, ச, சா, த, தா, ப, பா முதலானவை) நடுவிலே க், ச், த், ப் ஆகிய வல்லின மெய்யெழுத்துக்கள் சில விதிகளின் படி, சில சொற்களில் மட்டும் நடுவில் சேருமிடங்களையே வல்லெழுத்து மிகுதல் என்கிறோம். தேர்வுகளி மதிப்பெண்கள் குறைவதற்கு முக்கிய காரணம் வல்லெழுத்து மிகும்/மிகா இடங்களை அறியாமையே. சாதாரணமாக தெரிந்து கொள்ள வேண்டிய சில முக்கிய விதிகள் மட்டுமே இங்கு விளக்கப் பட்டிருக்கிறது. இவற்றை நினைவு கொண்டாலே பெரும்பால பிழைகளை நீக்கிவிடலாம். :-

1. வல்லெழுத்து மிகா உதாரணங்கள்::-
   அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அவை, அது, இவை, இது, எவை, எது, யாவை, ஏது.

- அத்தனை + பெரியது = அத்தனை பெரியது.
- இத்தனை + சிறியது = இத்தனை சிறியது.
- எத்தனை + தூரம் = எத்தனை தூரம்?
- அவ்வளவு + கருணை = அவ்வளவு கருணை.
- இவ்வளவு + கோபம் = இவ்வளவு கோபம்.
- எவ்வளவு + தூரம் = எவ்வளவு தூரம்?
- அவை + பெரியவை = அவை பெரியவை.
- அது + பெரியது = அது பெரியது.
- இவை + சிறியவை = இவை சிறியவை.
- இது + சிறியது = இது சிறியது.
- எவை + தந்தன = எவை தந்தன?
- எது + தந்தது = எது தந்தது?

www.tamilgk.com

- யாவை + பெரியவை = யாவை பெரியவை?
- ஏது + கடல் = ஏது கடல்?

2. ஒற்றெழுத்து மிகாத சில முக்கியமான இலக்கணக் குறிப்புகள்::-

எழுவாய்த் தொடர்களில் (முதல் வேற்றுமை), ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர்த்து பிற பெயரெச்சங்களில், வினைத்தொகைகளில், உம்மைத்தொகைகளில், "த்த", "ந்து" என முடியும் சொற்களையடுத்து ஒற்று மிகாது. உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. :- -

1. எழுவாய்த் தொடர் (முதல் வேற்றுமை):-

(உ-ம்)
அவர் + படித்தார் = அவர் படித்தார்,
கனிமொழி + சிரித்தாள் = கனிமொழி சிரித்தாள்,

2. ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர பிற பெயரெச்சங்கள்:-

(உ-ம்)
நல்ல + பாம்பு = நல்ல பாம்பு
அடித்த + புயல் = அடித்த புயல்

3. வினைத் தொகைகள்:-

(உ-ம்)
ஊறு + காய் = ஊறுகாய்
வளர் + பிறை =வளர்பிறை

4. உம்மைத் தொகைகள்:-

www.tamilgk.com

(உ-ம்)

இரவு + பகல் = இரவு பகல் (இரவும் பகலும்) சேர
+சோழ + பாண்டியர் = சேர சோழ பாண்டியர் (சேரரும், சோழரும், பாண்டியரும்)

5. "த்த, ந்து" என முடியும் சொற்கள்:-

(உ-ம்)

பார்த்த + பெண் = பார்த்த பெண்
வந்து + சென்றாள் = வந்து சென்றாள்

+
+++
+++++
+++
+

www.tamilgk.com